**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவாதத்தில் கலந்துகொள்கிற வாய்ப்பு நல்கிய தங்களுக்கும் நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை இங்கே நான் முதலிலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு) நாளை தொடரும் என்று சொல்லிவிடுங்கள். (குறுக்கீடு) ஏற்கெனவே 2 மணி 11 நிமிடங்கள் ஆகிறது என்கிற காரணத்தினாலே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளைக்கு இதை எடுத்துக்கொண்டால் கொஞ்சம் தெளிவாகப் பேசுவதற்கு வாய்ப்பாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் நாளை தொடரும்.

## 10. அரசினர் தீர்மானம்

### விதி 32-ஐத் தளர்த்துதல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவிற்கிணங்க நாளை (14-11-2008) வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்றுள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ 14-11-2008, வெள்ளிக்கிழமை அன்று தளர்த்தி அந்த நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்ற தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை 14-11-2008 வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (14-11-2008) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-12 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*29. 2007-2008* ஆம் ஆண்டிற்கான அரசு இரப்பர் கழகத்தின் இருபத்து நான்காவது ஆண்டறிக்கை. [*1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *1/1956*) *619*-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

*30. 2006-2007* ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தின் முப்பத்து மூன்றாவது ஆண்டறிக்கையும், கணக்குகளும். [*1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *1/1956*) *619*-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

*31. 2006-2007* ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகத்தின் முப்பத்து நான்காவது ஆண்டறிக்கை. [*1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *1/1956*) *619*-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*20.* பொதுக் கணக்குக் குழுவின் நூற்று இருபத்து ஏழாவது அறிக்கை. *(2008-2009)*

*21.* பொதுக் கணக்குக் குழுவின் நூற்று இருபத்து எட்டாவது அறிக்கை. *(2008-2009)*

*22.* பொதுக் கணக்குக் குழுவின் நூற்று இருபத்து ஒன்பதாவது அறிக்கை. *(2008-2009)*

*23.* பொதுக் கணக்குக் குழுவின் நூற்று முப்பதாவது அறிக்கை. *(2008-2009)*

*24.* பொதுக் கணக்குக் குழுவின் நூற்று முப்பத்து ஒன்றாவது அறிக்கை. *(2008-2009)*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS